(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(3).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 மார்ச் 07 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2024 மார்ச் 19, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உறுப்புரை மற்றும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய 2311/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2370/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் உரித்துப் பதிவு தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் மதியுரையின் மீதும் விதப்புரையின் மீதும் அச்சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 7 ஆம் பிரிவின் கீழ் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் உரிமமளித்தல் தொடர்பாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 10 ஆம் திகதிய 2340/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2024 ஏப்ரல் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

589/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட இலங்கையின் ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு அமைச்சு/திணைக்களத்தின் பிரகாரம் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) 2019.01.01 முதல் 2019.12.31 வரை ஓய்வுறுத்தப்பட்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2020 முதல் 2022 வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மற்றும் ஓய்வுறுத்தப்பட்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) 2023.01.01 ஆம் திகதியில் காணப்பட்ட ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரச சேவையில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) கடந்த காலத்தில் ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படாமை காரணமாக அரச சேவையில் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி வீழ்ச்சியை தவிர்த்துக் கொண்டு அரச சேவையை வினைத்திறனுடன் பேணிவருவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

613/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.01.01 ஆம் திகதியளவில் மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நாட்டில் தற்போது காணப்படுகின்ற மதுபான உரிமங்களின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு மதுபான உரிம வகைக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.01.01 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அந்த எண்ணிக்கையானது இன்றளவில் வழங்கப்பட்டுள்ள மொத்த உரிமங்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(vi) அந்தச் சதவீதமானது ஒவ்வொரு மதுபான உரிம வகைக்கமைய வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதுபானங்களை எளிதில் பெறக்கூடிய நிலை காணப்படுதலே மதுபான நுகர்வு அதிகரிப்பதற்கான பிரதான காரணம் என்பதையும்;

(ii) அதனால், மதுபாவனை சார்ந்த நோய்கள் அதிகரிப்பதால் சுகாதாரத்திற்காக ஒதுக்க வேண்டிய நிதி அதிகரிக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

637/2024

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் மூடப்பட்டுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய பாடசாலைகளில் காணப்படுகின்ற காணிகளையும் கட்டடங்களையும் பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கை மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அம்மாணவர்களுக்காக ஓராண்டில் செலவிட வேண்டியிருக்கும் அந்நியச் செலாவணி அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது காணப்படுகின்ற அதிபர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1091/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை புகையிரதங்களில் மோதி இறந்துள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புகையிரதங்களில் காட்டு யானைகள் மோதுவதைத் தடுப்பதற்கு முறையான பொறிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) இது தொடர்பாக இலங்கை புகையிரத திணைக்களமும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களமும் இணைந்து கூட்டு வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துகின்றனவா என்பதையும்;

(iv) புகையிரதங்களில் காட்டு யானைகள் மோதுவதைத் தடுப்பதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் கடைபிடிக்கப்படவுள்ள வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1127/2024

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் இருக்கின்ற அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2019ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) அலங்கார மீன் வளர்ப்புத் தொழிற்றுறையை பாதுகாக்க நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1147/2024

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலத்தில் நிலவிய வறட்சியின் காரணமாக இரத்தினபுரி, உடவளவை நீர்த்தேக்கம் வற்றிப்போனதென்பதையும்;

(ii) அதன் காரணமாக அப்பகுதி விவசாயிகள் மற்றும் வன விலங்குகள் தண்ணீரின்றி கடுமையாக பாதிக்கப்பட்டன என்பதையும்;

(iii) வண்டல் மண் காரணமாக மேற்படி நீர்த்தேக்கம் பெருமளவில் நிரம்பியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உடவளவை நீர்த்தேக்கத்திலுள்ள வண்டல் மண்ணை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்கென ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) வண்டல் மண்ணை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1153/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தொல்லியல் தளங்களின் எண்ணிக்கை யாது;

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி தளங்களில் முறையான துப்பரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) தொல்லியல் தளங்களுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மத்திய கலாசார நிதியத்தினூடாக இன்றளவில் செயற்படுத்தி வருகின்ற வேலைத்திட்டம் யாது;

(iv) தொல்லியல் தளங்களில் சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கும் புதிய கட்டுமானங்களைத் தடுப்பதற்கும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொல்லியல் தளங்களைக் காட்டும் உத்தியோகபூர்வ இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறெனில், எவ்வளவு காலத்திற்கொரு தடவை இற்றைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1250/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த சில வருடங்களாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தினை அதிகரிப்பது தொடர்பான முன்னேற்றத்தினையும்;

(ii) முன்னேற்றம் இருப்பின், சம்பளம் அதிகரிக்கப்பட்ட தொகையினையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அதிகரிப்பு செலுத்தப்படும் திகதியினையும்;

(iv) முன்னேற்றம் இல்லையெனில், அமைச்சர் எதிர்நோக்கும் தடைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1253/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது அப்பணியகம் பின்பற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரம் வழங்கும்போது அச்செயன்முறையின் சுயாதீனத் தன்மைக்கு அழுத்தம் விடுக்கப்படுவதாக பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் ஊழல் நிறைந்த நிறுவனமாக மாறியுள்ள மேற்படி நிறுவனத்தை, அந்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1284/2024

கௌரவ அசங்க நவரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இன்றளவில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்விக் கோட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) வெற்றிடங்களை நிரப்புவது தாமதமாகும் பட்சத்தில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 ஏப்ரல் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1287/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சிரம வாசனா நிதியம்" ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி நிதியத்தின் மூலமாகப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப்பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிதியத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1700/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவசர பெறுகைத் திட்டத்தின் படி 2022/MSD/V/R/P/0066 ஆம் இலக்க கேள்விப் பத்திரத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்ட முப்பத்திரண்டு (32) வகையான மருந்துகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்து வகைகளுள் விநியோகம் செய்யப்பட்ட மருந்து வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப்பத்திரத்தை வழங்கும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மருந்துகளைப் பாவித்தமையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் பதிவாகியுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளுக்கான அனுப்பாணைக் கோரிக்கை (Work Order Request) யாரால் சமர்ப்பிக்கட்டது என்பதையும்;

(iii) 2 – 8 பாகை செல்சியசுக்கு இடைப்பட்ட வெப்பநிலையின் கீழ் வழங்கப்பட வேண்டிய சில மருந்துகள் குறித்த கட்டளையினுள் உள்ளடங்கியிருந்த நிலையிலும், மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்படி கட்டளைக்கான அனுமதி வழங்கப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1702/2024

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை பொலிஸில், பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய ஒவ்வொரு பதவியிலும் சேவையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவியிலும் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

(iv) பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வு பெற எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை பொலிசுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது, தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1727/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை புத்தளம் மாவட்டத்தில் யானை-மனித மோதல் காரணமாக மரணித்துள்ள ஆட்களினதும் காட்டு யானைகளினதும் எண்ணிக்கை, ஒவ்வொரு வனசீவராசிகள் வலயத்திற்கு ஏற்ப தனித் தனியே யாதென்பதையும்;

(ii) புத்தளம் மாவட்டத்தில் நிலவும் யானை-மனித மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றினைப் பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1737/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தக்கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக யாது;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்படும் நெற்களஞ்சியசாலைகளுக்கு மத்தியில் தற்போது பயன்படுத்தப்படாதுள்ள களஞ்சியசாலைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) பயன்படுத்தப்படாதுள்ள நெற்களஞ்சியசாலைகளை மீண்டும் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சியசாலைகளிலிருந்து உச்சப் பயனை பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா 27/2024

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ வேலு குமார்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகள் நிறைவேற்றப்படுகின்றதென கௌரவ எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் பலத்த எதிர்ப்பு முன்வைக்கப்பட்ட நிலையிலும் அத்தகைய எதிர்ப்பினைப் பொருட்படுத்தாமல் மேற்படி உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆளும் கட்சிக்கு இடமளித்தமை ஊடாகவும்;

குறிப்பாக,

(அ) மேற்படி சட்டமூலத்தின் 13 ஆம் பிரிவு அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அப்பிரிவு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அதற்கமைவாக மேற்படி திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் மேற்படி பிரிவினை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஆ) மேற்படி சட்டமூலத்தின் 17 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அது விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப் பிரிவை முழுப் பாராளுமன்றக் குழுவில் நீக்குவதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அப்பிரிவை எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறாகவே சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(இ) மேற்படி சட்டமூலத்தின் 20, 33(6), 34(1), 35(1) ஆம் பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக விசேட பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஈ) மேற்படி சட்டமூலத்தின் 21 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அதனை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திருத்தங்களை முழுப் பாராளுமன்றக் குழுவில் முன்வைப்பதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அவ்வாறாக செயற்படாமல் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(உ) மேற்படி சட்டமூலத்தின் 22 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும், அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஊ) மேற்படி சட்டமூலத்தின் 31 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும், அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

இதனை உறுதிப்படுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும், மேற்படி சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு இணங்க செயற்படவில்லை எனவும் அவ்வாறு செயற்பட தவறியுள்ளதால், ஏலவே அச்சட்டமூலத்தை உள்ளவாறே நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான வாக்குகள் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பில் பாரிய சிக்கல் எழுந்துள்ளதாகவும், சபாநாயகருக்கு அவ் ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 2024 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும்;

அத்துடன், நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டின்போது எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், மிகத்தெளிவாக வாக்கெடுப்பைக் கோரியிருந்தபோதும், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமலும், வாக்கெடுப்பு ஒன்றினை வழங்காமலும் அச்சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றிக்கொள்ள இடமளித்தமை ஊடாகவும்;

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக, சில பிரிவுகளை ஆளும் கட்சி நிறைவேற்றிக் கொண்டுள்ளதால் அது தொடர்பில் ஆழமாக ஆராயும் வரை அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான சான்றுரையை அளிக்க வேண்டாமென எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தின்போது கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாது அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு சான்றுரை அளித்துள்ளதன் ஊடாகவும்;

2024 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்ற அரசியலமைப்புப் பேரவைக் கூட்டத்தின் போது பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயர் பரிசீலிக்கப்பட்டபோது, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த நபரை அந்தப் பதவிக்கு நியமனம் செய்வதற்காக அரசியலமைப்புப் பேரவை அங்கத்தவர்களில் நான்கு பேர் ஆதரவாகவும், இரண்டு பேர் எதிராகவும் வாக்களித்திருந்த நிலையிலும் அத்துடன் இரண்டு அங்கத்தவர்கள் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்த நிலையிலும் மற்றும் அதன்படி, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயரை பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு, அரசியலமைப்புப் பேரவையினால் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகரித்திராத நிலையிலும் சனாதிபதி அவர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்தியிருந்த 2024 பெப்ரவரி 26 ஆம் திகதிய கடிதத்தின் 4 ஆம் பந்தியில்,

> “எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 41(உ) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவைக் கூட்டமொன்றில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதால், வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதானது சட்டத்தின் முன் உரிய விடயத்தை எதிர்ப்பதாக கருதப்படும் பட்சத்தில் மற்றும் அரசியலமைப்பின் 41(உ) (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் குறிப்பிட்ட பிரச்சினை மீது சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்துள்ளதாக கருதப்படும் பட்சத்தில் தவிசாளர் என்ற வகையில் எனது அறுதியிடும் வாக்கையும் ஆதரவாக அளிப்பதாக தயவுடன் அறியத்தருகின்றேன்”.

எனக் குறிப்பிட்டு அவ்வாறு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்ட நபரை சட்ட விரோதமாகவும், அரசியலமைப்புக்கு விரோதமாகவும் பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிப்பதற்கு அரசியலமைப்புக்கு விரோதமான முறையிலும் சட்ட விரோதமான முறையிலும், சனாதிபதிக்கு உடந்தையாகவும், உறுதுணையாகவும், துணையாதரவாகவும் இருந்ததன் ஊடாகவும்;

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது அரசியலமைப்பை அப்பட்டமாக மீறும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்புப் பேரவை ஆகிய மீயுயர் நிறுவனங்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இழக்கப்படும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

சபாநாயகர் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை அப்பட்டமாக மீறியுள்ளதாலும்;

சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என்பதை தெளிவாக வெளிப்படுத்தி சபாநாயகர் பதவியின் சுயாதீனத்துக்கும், மாண்புக்கும் அப்பட்டமாக களங்கம் ஏற்படுத்தியுள்ளதாலும்;

பக்கச்சார்பின்றி சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள சபாநாயகரே பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாலும்,

சபாநாயகர் பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தவறியுள்ளதாலும்;

சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் மீது மேற்கொண்டும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.